2004 நவம்பர் 18]

மாணவர்களுடைய விடுதிகள் மட்டும், மொத்தம் 972 விடுதிகள் இருந்தன. அவற்றில் தனியார் விடுதிகள் மட்டும் 770. இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர், இன்று அரசினுடைய 314 விடுதிகளுக்குப் புதிய கட்டடங்கள் நிரந்தரமாகக் கட்டுவதற்கான உத்தரவுகள் வழங்கி, இப்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. அதுமட்டுமல்லாமல், இப்போது போதிய அடிப்படை வசதிகள் செய்வதற்கான சாத்தியக்கூறுகளையும் செய்து கொண்டு இருக்கிறார்கள். மேலும், பள்ளி விடுதி மாணவர் ஒருவருக்கு, ஒரு மாதத்திற்கு உணவுக் கட்டணம் ரூ.225 என்று இருந்ததை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ரூ.300 ஆக உயர்த்தி இருக்கிறது. இதுபோன்ற செலவினத்தைச் செய்து இப்போது வாடகைக் கட்டடங்களில் இருக்கிற 770 விடுதிகளில் 314 விடுதிகளுக்குப் புதிதாக நிரந்தரக் கட்டடத்தைக் கட்டிய அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. இதுபோன்று செயல்பட்டுகொண்டு இருக்கின்றபோது,, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்து குறித்து மாண்புமிகு இதய தெய்வம் தங்கத் தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையின்பேரில், வருங்காலத்திலே நிதிநிலைமைக்கேற்பப் பரிசீலிக்கப்படும் என்பதை இம் மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விடுதி என்பது கிராமப்புறங்களிலே இருக்கின்ற பள்ளிகளுக்கு மிகவும் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது. இங்கே நான் கேட்டு இருக்கின்ற வடக்கம்பட்டி பள்ளி விடுதியில்கூட, தங்களுடைய தொகுதியிலே இருந்து பெரும்பான்மையான மாணவர்கள் வந்து அங்கு படித்துக் கொண்டு இருக்கிறார்கள். எனவே, இரண்டுக்கும் பொதுவான ஒன்றுதான். அதற்குப் போதிய போக்குவரத்து வசதிகள்கூட இல்லை. எனவே, இதற்கென்று தனியாக சிறப்புக் கவனம் செலுத்தி, அமைச்சர் அவர்கள் இந்த விடுதியைக் கட்டுவதற்கு உரிய நிலையை--விடுதியை உருவாக்குவதற்குரிய நிலையை--உருவாக்கித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2004 நவம்பர் 18

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.சி. கருணாகரன்.

திரு. கே.சி. கருணாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

வினா எண் 22, திரு. கா.பூ. முனுசாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

22—

பதப்படுத்தும் தொழிற்சாலை

*** 10313—திரு. கா.பூ. முனுசாமி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கோழி இறைச்சியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய பதப்படுத்தும் தொழிற்சாலையைத் துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கா.பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் உள்ள விவசாயிகளினுடைய உப தொழிலாக இந்தக் கோழி வளர்ப்புத் தொழில் இருக்கிறது. குறிப்பாக ஐந்து மாவட்டங்களில் இந்தத் தொழிலை முதன்மைத் தொழிலாக எடுத்திருக்கிறார்கள். நாமக்கல், கோவை, தருமபுரி, சேலம், கிருஷ்ணகிரி, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் விவசாயிகள் இதை உப தொழிலாக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2004 நவம்பர் 18]

எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதிலும், இறைச்சிக் கோழி என்பதை ஒரு குறிப்பிட்ட கால அளவில் உடனே விற்றாக வேண்டும். இங்கேகூட அந்த இறைச்சிக் கோழியை வாங்குகின்ற தனியார் நிறுவனங்கள் ஓரிரு நிறுவனங்கள்தான் இருக்கின்றன. அதை அவர்கள் வாங்குகின்றபோது விவசாயிகளிடத்திலே விலை குறைவாக வாங்குகின்ற காரணத்தினால், அந்தக் கோழி வளர்ப்போருக்கு நிறைய நட்டம் ஏற்படுகிறது. எனவே, இந்தப் பதப்படுத்துகின்ற தொழிற்சாலையை அரசே எடுத்து நடத்துவதற்கு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கோழி இறைச்சியைப் பதப்படுத்தி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு ஏதுவாக தற்போது வசதிகள் ஏதுமில்லை. மேலும், தனியாரால் மிகக் குறைந்த அளவே இறைச்சி பதப்படுத்தப்பட்டு, வெளிநாட்டிற்கு அனுப்பப்படுகிறது. அரசின் கூட்டு முயற்சியால், கோழி இறைச்சி தொழிற்சாலை அமைப்பதற்கான வாய்ப்புகள் தற்போது ஏதுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கா.பூ. முனுசாமி

திரு. கா.பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டொன்றுக்கு கோழி வளர்ப்போர் மூலமாக கிட்டத்தட்ட மூன்றேகால் கோடி கோழிகள் வளர்க்கப்படுகின்றன. இப்படி வளர்க்கப்படுகின்ற கோழிகளுக்கு இந்தியாவில், அதிலும் குறிப்பாக தமிழகத்தில் இதுவரையில் பறவைக் காய்ச்சல் வரவில்லை என்பதை அரசு ஆணித்தரமாகக் கூறியிருக்கிறது. கிழக்காசிய நாடுகளில் இதுபோன்ற பறவைக் காய்ச்சல் வந்த காரணத்தினால் அரபு நாடுகளுக்கு அந்தப் பகுதிகளிலேயிருந்து கோழி இறைச்சி ஏற்றுமதி செய்யப்படுவதில்லை. எனவே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய நல்ல அரசு, தனியார் துறைகள் இதைச் செய்ய முன்வந்தால், சிறப்புச் சலுகைகள் அளித்து, அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோழி இறைச்சியைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்வதற்கு தொழிற்சாலைகள் நிறுவிட அரசிற்குக் கூடுதலாக நிதி தேவைப்படும். எனவே, கோழி இறைச்சி பதப்படுத்தும்

தொழிற்சாலையைத் தனியார் எவரும் துவக்க முன்வந்தால், அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்திட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ.கு. தமிழரசன்.

திரு. செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளிலே வாழ்கின்ற மக்களிலே 90 சதவீதம் பேர் மாட்டிறைச்சியை உணவாகப் பயன்படுத்துகிறார்கள். தென் மாநிலங்களிலேயே கேரள மாநிலம் மட்டும்தான் மாட்டிறைச்சியைப் பதப்படுத்தி, வெளிநாடுகளுக்கு அனுப்பி, ஒவ்வோர் ஆண்டும் மிகக் குறைந்தபட்சம் 500 கோடி ரூபாய் வரையிலே அன்னியச் செலாவணியைப் பெறுகிற மாநிலமாக இருக்கிறது. ஆகவே, தமிழ்நாட்டிலே இருந்து பல நேரங்களிலே, தமிழ்நாட்டின் எல்லையோரங்களிலே, கேரள எல்லையோரங்களிலே - இங்கேயிருந்து மாடுகள் கேரள மாநிலத்திற்குப் போவதும், அங்கேயிருந்து அவை இறைச்சியாகப் பதப்படுத்தப்பட்டு, வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதும் வழக்கமாக இருந்து வருவதால் மாநில எல்லையோரங்களிலே பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஆகவே, மாட்டிறைச்சியைப் பதப்படுத்தி அனுப்புவதற்கு அப்படிப்பட்ட தனியார் நிறுவனங்களுக்கோ அல்லது அரசு கூட்டு நிறுவனங்களுக்கோ தொழிற்சாலை தொடங்க அனுமதி கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா? பொள்ளாச்சியிலே ஒரு தனியார் நிறுவனம் இந்தத் தொழிற்சாலையைத் தொடங்க முன்வந்தது. அது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறதா என்பதைத் தங்கள்மூலம் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் அதற்குத் தகுந்த பதில் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோழியோடு நில்லுங்கள். மாட்டுக்குப் போகாதீர்கள்! (சிரிப்பு) திரு. சுந்தரம்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முனுசாமி அவர்கள் கோழியைப் பற்றிப்